# 21

# "தேவனுக்குச் சமமானவர்"

## யோவான் 5:16–47,

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*இயேசு தமது தொடக்க காலக் கலிலேய ஊழியத்தில் எருசலேமுக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டு இருந்தார். அங்கிருக்கையில் அவர் பெதஸ்தா குளத்தினருகில் ஒரு மனிதரைக் குணமாக்கினார் (யோவா. 5:2, 5, 8, 9அ). இந்த நிகழ்ச்சியைக் கூறியதில் யோவான் பின்வரும் செறிவுமிக்க விளக்கவுரையைக் கூட்டினார்: "அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது" (வ. 9ஆ).[1]*

### தாக்குவதற்கான குற்றச்சாட்டுகள் (வ. 16-18)

*குணமாக்குதலின் விளைவானது யூத அதிகாரிகளுடன் முகமுகமாக எதிர்த்து நிற்குதலை விளைவித்தது. இயேசு ஓய்வுநாளை மீறியதாக மார்க்கத் தலைவர்கள் குற்றம் சாட்டினார்கள்.[2]*

*"என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன்" என்பதே நமது கர்த்தரின் பதிலாக இருந்தது (வ. 17). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "தேவன் ஓய்வுநாளில் ஓய்ந்திருந் தார் என்பது உண்மையாகவே உள்ளது,[3] ஆனால் இது தேவன் நன்மை செய்வதை நிறுத்திவிட்டார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. ஓய்வு நாளில்கூட அவர் உலகத்தைப் பரமாரிக்கின்றார்.[4] ஓய்வுநாளில்கூட அவர் சூரிய வெளிச்சத்தையும் மழையையும் அனுப்புகின்றார்"[5] என்று அவர் கூறினார். தேவன் ஏழாம் நாளில்கூட மக்களுக்கு உதவுகின்றார் என்பதால், அந்த நாளில் மக்களுக்கு உதவுதல் என்பது அவரை(அதாவது இயேசுவை)ப் பொறுத்தமட்டில் சரியானதாகவே இருந்தது என்பது இயேசுவின் வாதமாயிருந்தது.*

*கிறிஸ்துவின் வார்த்தைகள் யூதத்துவத் தலைவர்களை மூர்க்கமடையச் செய்தன, ஏனெனில் அவரது வாதத்தில் அவர்கள் மறைமுகக் கருத்துக் களைக் கண்டார்கள். முதலிடத்தில், அவர் "என் பிதா" என்று கூறினார். மனிதர்கள் சாதாரணமாக "எங்கள் பிதா" (மத். 6:9; ரோமர் 1:7; 1 கொரி. 1:3) என்று கூறினார்கள், ஆனால் இயேசு, "என் பிதா" என்று கூறினார் (மத். 7:21; 10:32; 11:27) - இது ஒரு விசேஷித்த உறவை மறைமுகமாக உணர்த் திற்று. இரண்டாவது இடத்தில், இயேசு தேவனையும் தம்மையும் ஒரே விதமான செயல்பாட்டில் ஈடுபட்டிருந்ததாகச் சித்தரித்தார்: "என் பிதா ...*

கிரியை செய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன்.'' இதன் விளைவாக, "... தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்'' (வ. 17, 18).

விடுதலை இறையியல் அறிஞர்கள் சுவிசேஷ விவரங்களை வாசிக்க முடிந்து[ம்], இயேசு ஒருக்காலும் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொள்ளவில்லை, ஒருக்காலும் தாம் தெய்வீகமானவர் என்று உரிமை கோரியதில்லை என்று கூறுவதைக் கேட்டு நான் திகைப்படைகின்றேன். கிறிஸ்துவின் நாட்களில் இருந்த மார்க்கத் தலைவர்கள் அவரது வார்த்தை களின் தனிச்சிறப்பைப் புரிந்துகொள்ளுவதில் எவ்வித சிரமமும் அடைய வில்லை.

இயேசு தம்மை "தேவனுக்குச் சமமானவர்'' என்று மறைமுகமாய் உணர்த்துவதை அர்த்தப்படுத்தவில்லை என்றால், அவருக்கு, "ஓ, இல்லை, நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டீர்கள்! நான் அதை கூறவில்லை'' என்று கூறுவது சுலபமாக இருந்திருக்கும். அவர்களின் குற்றச்சாட்டை அவர் மறுக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் குற்றச்சாட்டை, தமது பிதாவுடன் தமக்குள்ள உறவுபற்றி நிபுணத்துவம் நிறைந்த உரையொன் றைக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தினார். இது யோவான் புத்தகத்தில் உள்ள மாபெரும் பிரசங்கங்களில் ஒன்றாக உள்ளது. அதனை வசனத்திற்கு பின் வசனமாக விளக்கியுரைக்க இங்கு இடம் நம்மை அனுமதிக்காது, ஆனால் நாம் அதன் திறவுகோல் சிந்தனைகளை முக்கியப் படுத்தி எடுத்துரைப்போம்.

## நம்புதற்கு அரிய உரிமைகோருதல்கள் (வ. 19-30)

**இயேசுவின் விவாதப்படிநிலை**

இயேசுவும் அவரது பிதாவும் தாங்கள் செய்தவற்றில் ஒருமித்து இருந்தார்கள் என்பதே அவரது விவாதத்தின் அடிப்படைப் படிநிலையாக இருந்தது. "தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார்'' என்ற சொற்றொடர், கிறிஸ்து தம்மைத் தேவனுக்குப் போட்டியாளர் என்று நினைத்தார் என்பதாக அர்த்தப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும், ஆனால் விஷயம் அதுவல்ல என்று அவர் வலியுறுத்தினார். அவர், "குமாரன் ... ஒன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்'' (வ. 19) என்று வலியுறுத்தினார். மீண்டும் அவர், ''நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை'' என்றும் கூறினார் (வ. 30).

**உதாரணங்கள்**

இயேசு, தாமும் பிதாவும் எவ்வாறு ஒன்றித்திருக்கின்றனர் என்பதற்குப் பல உதாரணங்களைக் கொடுத்தார். வசனம் 21 முதல் 30 வரைக்கும், மூன்று ஆய்வுக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் தோன்றி ஒன்றின் மீதொன்று

கவிந்துள்ளன: ஜீவனைக் கொடுத்தல், மரித்தோரை உயிர்ப்பித்தல், மற்றும் மனிதகுலத்தை நியாயந்தீர்த்தல். ஜீவனைக் கொடுத்தல், மரித்தோரை உயிர்ப்பித்தல் மற்றும் நியாயத்தீர்ப்பை உரைத்தல் ஆகியவை தேவனுடைய (மற்றும் அவருக்கு மட்டுமே உரிய) தனிச்சிறப்புரிமைகள் என்று யூதர்கள் நினைத்தார்கள்[6] - ஆனால் கிறிஸ்து தாமும் தேவனும் இந்த மூன்று பணிகளிலும் உடன் பணியாளர்களாய் இருந்ததாகத் தைரியமாய் உரிமை கோரினார்.

*(1) ஜீவனைக் கொடுப்பதில் ஒன்றித்திருத்தல்.* இயேசு முதலில் ஜீவனைக் கொடுத்தல் பற்றிப் பேசினார்: "பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்" (வ. 21). உரையாடலின் இந்த இடத்தில், வார்த்தைகள் அநேகமாக இயேசு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுத்தல் பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். மேலும் இயேசு, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு[7] நித்தியஜீவன் உண்டு,[8] அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல்,[9] மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூறினார் (வ. 24).

*(2) மரித்தோரை உயிர்ப்பித்தலில் ஒன்றித்திருத்தல்.* வசனம் 21ன் உரிமைகோருதல் சரீரப்பிரகாரமான ஜீவனைக் கொடுத்தலையும் உள்ளடக்கியிருக்க முடியும். இயேசு, யூதர்கள் "ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும்" தாம் நிகழ்த்தப் போவதாக முன்னுரைத்தார் (வ. 20). இது அநேகமாக, கிறிஸ்துவின் சொந்த ஊழியத்தின்போது மரித்தோரை உயிர்ப்பித்தல் பற்றிய ஒரு குறிப்பாக இருக்கலாம்[10] - விசேஷமாக இது லாசருவை உயிர்ப்பித்தலைக் குறித்திருக்கலாம், அது எருசலேமில் அப்படிப்பட்ட கலவரத்திற்குக் காரணமாகும் (யோவா. 11:1-48; 12:1, 9-11).

ஆயினும், இயேசுவின் வல்லமை அவர் இந்த பூமியில் தங்கியிருந்த வேளையில் ஒரு சில மக்களை மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தலுக்கு அப்பாலும் சென்றது. காலத்தின் முடிவை முன்னதாக நோக்கிய அவர் பின்வருமாறு அறிவித்தார்:

> ... ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும் [அதாவது, மனுஷகுமாரனுடைய சத்தம்; வ. 27], அப்பொழுது, நன்மை செய்தவர்கள்[11] ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (வ. 28, 29).

இது இரண்டாம் வருகையின்போது மனிதகுலம் முழுவதும் பெறவிருக்கிற பொதுவான உயிர்த்தெழுதலுக்கான தெளிவான மற்றும் சுருக்கமான கூற்றாக உள்ளது.

*(3) நியாயத்தீர்ப்பில் ஒன்றித்திருத்தல்.* வசனங்கள் 28ம் 29ம் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து நியாயத்தீர்ப்பின் நாள் வரும் என்று

*மறைமுகமாக உணர்த்துகின்றன. இந்தப் பணியிலும் கூட, இயேசு தமது பிதாவுடன் ஒன்றித்திருப்பார். அவர், "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்"[12] என்று கூறினார் (வ. 22). தேவன், "அவர் [இயேசு] மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத் திருக்கிறார்" என்று அவர் வலியுறுத்தினார் (வ. 27). மீண்டும் அவர், "... நான் நியாயந்தீர்க்கிறேன் ... என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" (வ. 30) என்று உரிமைகோரினார்.*

*இயேசுவும் அவரது பிதாவும் ஜீவனைக் கொடுப்பதிலும், மரித்தோரை உயிர்ப்பித்தலிலும், நியாயத்தீர்ப்பிலும் ஒன்றித்திருப்பதால், அவரது உரையைக் கவனித்தவர்களின் பதில் என்னவாக இருந்திருக்க வேண்டும்? "பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்று இயேசு கூறினார், கூடுதலாக, "குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனா யிருக்கிறான்" என்றும் கூறினார் (வ. 23).*

*இயேசு என்ன ஒரு வரம்புமீறிய உரிமைகோருதல்களை ஏற்படுத் தினார்! அவர், தாம் கூறியது உண்மை என்பதற்கு ஆதாரத்தை அளிக்க வேண்டும் அல்லது தமது கூற்றுக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுவார்.*[13]

## குற்றமில்லாத சான்றுகள்
## *(வ. 31-47)*

*இயேசு, தாமும் தமது உரிமைகோருதல்களும் விசாரணையில் இருந்ததை உணர்ந்து அறிந்தார். அவர் தமக்காகச் சாட்சியளிக்க சாட்சியங் களின்*[14] *வளர்நிலையொன்றை அழைத்தார்.*

*சாட்சியங்கள் பற்றிய அவரது அறிமுகக்கூற்று விநோதமானதாக ஒலித்தது: "என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது" (வ. 31). "மட்டும்" என்ற வார்த்தை மொழிபெயர்ப்பாளர் களால் கூட்டப்பட்டுள்ளது. கிறிஸ்து உண்மையில் [தமிழில் உள்ளதுபோல்] "என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது" என்றே கூறினார். இயேசு தம்மைக் குறித்துச் "சாட்சியிட்டார்" அல்லது "சாட்சி கொடுத்தார்" (வ. 19-30). வசனம் 31, அதன் சந்தர்ப்பப் பொருளை விட்டு எடுக்கப்படும்போது, இயேசு தாம் உண்மையைக் கூறியிருக்க வில்லை என்று ஒலிக்கக் கூடும்.*

*யோவான் 5ஆம் அதிகாரத்திலுள்ள இயேசுவின் தற்காப்பு வாதமானது அதிகாரம் 8ல் அவரது தற்காப்பு வாதத்துடன் ஒப்பிடப்பட வேண்டும். அந்த சந்தர்ப்பத்தில், பரிசேயர்கள் கிறிஸ்துவிடம், "உன்னைக் குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல" என்று கூறினார்கள் (யோவா. 8:13). அதற்கு இயேசு, "என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது" என்று பதில்*

*அளித்தார் (வ. 14). பின்பு அவர், "இரண்டு பேருடைய சாட்சி உண்மை யென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன், என்னை அனுப் பின பிதாவும் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார்'' என்றும் கூடுதலாகக் கூறினார் (வ. 17, 18).*

*இவ்விரு கூற்றுக்களையும் ஒப்பிடுதலானது, யோவான் 5ல் இயேசு ஒரு பொய்யுரைத்ததாக அறிக்கை இடவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. மாறாக அவர், மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, ஒரு நபரின் சாட்சியம் போதுமானதல்ல என்று ஒப்புக்கொண்டார். இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் சாட்சியம் தேவைப்பட்டது (எண். 35:30; உபா. 17:6; 19:15; மத். 18:16ஐக் காணவும்). இதனால் தான் வசனம் 31ல்* NASB *மொழிபெயர்ப்பாளர்கள் "மட்டும்" என்ற வார்த்தையைச் சேர்த்தார்கள்: கிறிஸ்து மட்டுமே தம்மைப் பற்றி சாட்சியம் கொடுத்திருப்பாரேயானால், இது ஒரு யூதத்துவ நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிராது.*

*ஆகையால் இயேசு அதிகாரம் 8ல் குறிப்பிடப்பட்ட அதே சாட்சியை, இரண்டாவது சாட்சியாகக் கூட்டினார்: அவரது பிதா. கிறிஸ்து, "என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்னைக் குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன்" என்று கூறினார் (யோவா. 5:32). இது சந்தர்ப்பப் பொருளில் தேவனைக் குறிக்கிறது.[15] இயேசு, "என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார்" என்று வலியுறுத்தினார் (வ. 37). பல சாட்சிகள் ஏற்படுத்தப்படும், ஆனால் ஒவ்வொருவரின் சாட்சியும் உண்மையில் தேவன் என்ற பூரணத்துவமான ஒரே சாட்சியிடமிருந்து வந்ததாகவே இருந்தது. இந்த யூதர்கள் ஒருக்காலும், தேவனைக் கண்டதோ அல்லது அவரது சத்தத்தைக் கேட்டதோ இல்லை (வ. 37ஆ), ஆனால் அவர் தமது முகவர்களின் மூலமாக அவர்களிடத்தில் (யூதர்களிடத்தில்) தெளிவாகப் பேசியுள்ளார்.*

**யோவானின் சாட்சியம்**

*இயேசுவின் உரிமைகோருதல்களின் பல்வகைத் தன்மையானது மனித சாட்சியின்மீது அமைந்திருக்கவில்லை (வ. 34அ, 36அ), ஆனால் அழைக்கப் பட்ட முதலாவது சாட்சி ஒரு மனிதராகவே இருந்தார்: யோவான் ஸ்நானன். யோவான் தேவனுடைய விசேஷித்த செய்தியாளராக இருந்தபடியால் அவர் அழைக்கப்பட்டார் (மல். 3:1; லூக். 7:27) மற்றும் மேசியாவைப் பற்றிய அவரது சாட்சியானது ஒருக்காலும் மறுத்துரைக்கப் படவில்லை.*

*கிறிஸ்து, "நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தான்" என்று கூறினார் (யோவா. 5:33). இந்தக் குறிப்பானது, யோவானிடம் கேள்விகேட்க எருசலேமிலிருந்து ஒரு தூதுவர் குழுவை அனுப்பிய வேளையாக உள்ளது (யோவா. 1:19-28). யோவான் அவர்களிடத்தில், "... நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்;*

*அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல" என்று கூறியிருந்தார் (யோவா. 1:26, 27). அடுத்த நாளில், யோவான் இயேசுவைச் சுட்டிக் காண்பித்திருந்து[16] "... இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!"; "அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்'' என்று கூறினார் (வ. 29, 34).*

*யோவான் தம் வாழ்வில் பின்வரும் ஒரே நோக்கம் கொண்டிருந்தார்: மக்களை இயேசுவிடம் திருப்புதல். "க்ரன்வால்டஸ் என்பவரின் 'யோவான் ஸ்நானன்' என்ற சித்திரமானது ஐரோப்பாவின் மாபெரும் சித்திரங்களில் ஒன்றாக உள்ளது ... இந்தப் படத்தில் யோவான் தமது ஆள்காட்டி விரலை இயேசுவை நோக்கிச் சுட்டிக் காண்பித்து கவனத்தைத் திருப்புவது என்பதுதான் கவனத்தைக் கவருகிற அம்சமாக உள்ளது ... ."[17]*

*கிறிஸ்து யோவானின் சாட்சியைக் குறித்து, "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்;[18] நீங்களும் சில காலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்" என்று கூறினார் (யோவா. 5:35). இந்த வாக்கியத்தில் ''சிலகாலம்'' என்பது திறவுகோல் சொற்றொடராக உள்ளது.* R. C. *ஃபோஸ்டர் அவர்கள், "யோவானின் வெளிச்சத்தில் அவர்கள் சில காலம் - அந்த வெளிச்சம் அவர்களின் பாவங்களின் பக்கமாய்த் திரும்புவதற்கு முன்பு வரையிலும் - களிகூர்ந்திருந்தார்கள்!" என்று எழுதினார்.[19] அதன் பின்பு அவர்கள் அவரிடத்தில் ஏதொன்றும் அதிகமாய்ச் செய்ய விரும்பி யிருந்ததில்லை.*

*அவர்கள் யோவானின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்கள் இயேசுவையும் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். பின்பு அவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் (வ. 34ஆ).*

***அற்புதங்களின் சாட்சி***

*அடுத்தபடியாகக் கிறிஸ்து தமது அற்புதங்களின் சாட்சி பற்றிப் பேசினார்: "யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு, அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது" (வ. 36). "கிரியைகள்" என்ற வார்த்தை இயேசுவின் வாழ்வு முழுவதையும் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தப்பட முடியும்; நிச்சயமாகவே, அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற உண்மையை அவர் செய்த எல்லாச் செயல்களும் சாட்சியிட்டன என்பது உறுதி. ஆயினும் கிறிஸ்து, தேவனுடைய வல்லமையினால் தாம் செய்த அற்புதங்களைச் சிந்தையில் கொண்டிருந்தார்.[20]*

*இயேசு இதற்கு முன்பு எருசலேம் வந்திருந்தபோது பல அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார் (யோவா. 2:23). அந்த அற்புத செயல்களைப் பற்றி நிக்கொதேமு, "... நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந் திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" என்று*

*கூறியிருந்தார் (யோவா. 3:2). இயேசு எருசலேமுக்கு வந்திருந்த இந்தப் பயணத்திலும், குறைந்தபட்சம் ஒரு அற்புதத்தைச் செய்திருந்தார். அவர் இந்த வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தபோது அவரருகில், [பெதஸ்தா] குளத்தின் அண்டையில் குணமாக்கப்பட்டிருந்த மனிதன் நின்றுகொண்டு இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.*

*இயேசு அற்புதங்களைச் செய்தார் என்பதை அவரது விமர்சகர்கள் மறுக்க முடியாதிருந்தது,[21] ஆனால் அவர்கள் இன்னமும் அவரை மேசியா என்று ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.*

**வேத வாக்கியங்களின் சாட்சி**

*இயேசுவானவர் சாட்சியங்களாக தேவனிடமிருந்து வந்த ஒரு தூதுவனையும் மற்றும் தேவனிடமிருந்து வந்த அடையாளங்களையும் அழைத்திருந்தார். இப்போது அவர் தேவனுடைய வசனத்தின் சாட்சியத்தை அழைத்தார்: "வேதவாக்கியங்களை ஆராய்ந்து[22] பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (வ. 39). பழைய ஏற்பாட்டில் பல நூற்றுக்கணக்கான வசனங்கள் கிறிஸ்துவை முன்நோக்கி சுட்டிக்காட்டின (சங். 2; 22; ஏசா. 53) பிற்பாடு இயேசு, "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம்" (லூக். 24:44) என்று உரைத்தார்.*

*யூதத்துவத் தலைவர்கள் தங்கள் சுயமான வழிமுறைகளில் வேத வாக்கியங்களுக்கு ஒப்புக்கொடுத்து இருந்தார்கள். ரபீத்துவ எழுத்துக்கள், "நியாயப்பிரமாணத்தின் வசனங்களில் தனக்கென்று [அறிவை] ஆதாயப்படுத்தியுள்ள எவனும் இனி வரும் உலகில் தனக்கென்று ஜீவனை ஆதாயப்படுத்தியவனாக இருக்கின்றான்" என்று கூறின.[23] இந்தக் காரணத்தினாலேயே அவர்கள் வேதவாக்கியங்களை அருவியாகப் பொழிந்தார்கள். அவர்கள் வார்த்தைகளை எண்ணினார்கள், எழுத்துக்களை எண்ணினார்கள்; அவர்கள் ஒவ்வொரு "சிறு எழுத்தையும்" ஒவ்வொரு "எழுத்தின் உறுப்பையும்"[24] (மத். 5:18) தங்களின் இறையியல் நுண்ணோக்கியின் கீழ் இட்டார்கள். அப்படியிருந்தும் அவர்கள் "மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டு வருதல்" என்ற வேதவாக்கியங்கள் வடிவமைக்கப்பட்ட நோக்கத்தைத் தவற விட்டார்கள் (கலா. 3:24).*

*அவர்கள் ஒரு வழிகாட்டும் பலகை சுட்டிக்காட்டும் அடைவிடத்திற்குச் செல்வதற்குப் பதிலாக அந்தப் பலகையைக் கவனமாகப் பரிசோதித்து - அதை அளந்து, அதைப் பற்றிய வரைபடங்களை வரைந்து வரைந்து, அதைப் பற்றிய விவரிப்புகளை எழுதி - இருந்த மனிதர்களைப்போல் இருந்தார்கள். வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், யூதர்கள் "தேவனுடைய வசனத்தை அறியத் தேடினார்கள், ஆனால் அவர்கள் அந்த வசனத்தின் தேவனை அறியாதிருந்தார்கள்!"[25] என்று எழுதினார். அவர்கள் வசனத்தை தங்கள் இருதயங்களில் அல்ல ஆனால் தங்கள் தலைகளிலேயே கொண்டிருந்தார்கள் என்பதை இயேசு உய்த்துணர்ந்தார். அவர்களிடம் அவர், "அவருடைய வசனம்*

*உங்களில் தரித்திருக்கிறதுமில்லை" என்று கூறினார் (வ. 38).*

*மோசேயின் எழுத்துக்களைக் குறிப்பிட்ட இயேசு, தம்மைப் பற்றி வேத வாக்கியங்கள் சாட்சியளித்தன என்ற உண்மையைப் பற்றி மனதைத் தாக்கும் கூற்று ஒன்றை ஏற்படுத்தினார்:*

> *பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ் சாட்டுவான். நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள், அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை[26] நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா. 5:45-47).*

*"சந்ததி" [அல்லது] "வித்து" வரும் என்று மோசே எழுதியிருந்தார் (ஆதி. 3:15; 22:18; கலா. 3:16ஐக் காணவும்). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இவர் யூதாவின் சந்ததியில் தோன்றுவார் என்று அவர் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (ஆதி. 49:10). அவர் தம்மைப் போல் எழும்பவிருந்த ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி பேசியிருந்தார் (உபா. 18:15-18). அவரது எழுத்துக்கள் யாவும் மேசியாவை முன்னெதிர் நோக்குதல் பற்றிய மாதிரிகள் மற்றும் அதற்கு ஒப்பனையானவைகளினால் மிகைநிறைவை அடைந்திருந்தன.[27] ஆகையால், மோசே இயேசுவுக்குச் சாட்சியாக இருந்தார் என்று மட்டும் இயேசு கூறாமல், தம்மை[இயேசுவை]ப் புறக்கணிப்பவர்களுக்கு எதிர்ச் சாட்சியாக இருப்பார் என்றும் கூறினார். அவர், "மோசேயே உங்கள்மேல் குற்றஞ் சாட்டுவான்" என்று கூறினார் (யோவா. 5:45ஆ).*

*யூதத்துவத் தலைவர்கள், திரளான இந்தச் சாட்சிகளைக் கொண்டிருந்த போதிலும் இயேசுவை ஏன் புறக்கணித்தார்கள்? மனவிருப்பம் மற்றும் இருதயம் என்பதே பிரச்சனையாக இருந்தது என்று இயேசு கூறினார். "மனுஷருள்ளத்திலிருப்பதை ... அறிந்திருந்த" (யோவா. 2:25) ஒருவர் [இயேசு] பின்வரும் குற்றச் சாட்டைக் கொடுத்தார்: "... என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை ... உங்களில் தேவ அன்பு இல்லை" (5:40-42).*

*அவர்கள் "தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல்" (வ. 44) மனிதர்களிடமிருந்து வருகிற மகிமையைத் தேடினார்கள் என்பது ஒரு பிரச்சனையாக இருந்தது. [யூதத்துவத்] தலைவர்களிடம் இயேசு (உண்மையில்), மேசியா என்று தன்னை உரிமைகோரிக் கொண்டு வருகிற ஒருவர் பரலோகச் சான்றுகளில் குறைவுபட்டிருந்தால், அவர்களை அவர் மயக்கியிருக்கும் வரைக்குமே அவர்கள் அவரை ஏற்றுக் கொள்வார்கள் மற்றும் பின்பு அவர்கள் தங்கள் கால அட்டவணையை மாற்றிக் கொள்வார்கள் என்று கூறினார் (வ. 43ஆ). இதற்கு நேர்மாறாக யூதர்கள், பரலோக அங்கீகாரத்துடன் வந்த இயேசுவை ஏற்றுக் கொள்வதைப் புறக்கணித்திருந்தார்கள் (வ. 43அ) ஏனென்றால் அவர்கள் தாங்கள் பெறத்தகுதியானதென்று நினைத்திருந்த மகிமையை அவர்களுக்குத் தருவதற்கு அவர் மறுத்தார்.[28]*

*எருசலேமில் இருந்த மதஅதிகாரிகள் உண்மையற்றவைகளை, பொருட்படுத்தப்படாதவைகளை அதிகமாய் அறிந்திருந்தார்கள்,*

*சத்தியத்திற்கோ அவர்கள் காது கேளாதவர்களாகவும் பார்வையில்லாதவர்களாகவும் இருந்தார்கள் என்பதே அவர்களின் நிலை பற்றி நாம் சுருக்கமாகக் கூறி முடிகிற கருத்தாகும்*[29] *(மத். 13:15ஐக் காணவும்).*

*வசனத்தை ஊக்கமாய்ப் படித்தும்கூட, சத்தியத்தின் இரட்சிக்கும் [வல்லமை பற்றிய] அறிவை ஒருக்காலும் பெற்றுக்கொள்ளாது, வசனத்தின் மாணவராய் இருப்பது சாத்தியமே என்பதை உணர்ந்தறிதல் என்பது தெளிவானதாக உள்ளது அல்லவா? வேத வாக்கியங்களை நாம் எப்போதுமே, சரியான எண்ணப்போக்குடன் ("சத்தியத்தின் மேல் அன்பு"; 2 தெச. 2:10) மற்றும் சரியான நோக்கத்துடன் ("கர்த்தரை அறிதல்"; எபி. 8:11) அனுகுவதற்குத் தேவன் உதவுவாராக.*

## *முடிவுரை*[30]

*இயேசு ஓய்வுநாளை மீறினார் என்று அவர்மீது யூதத்துவத் தலைவர்கள் குற்றஞ்சாட்டியபோது, அவர் பயமடைந்தவராவார் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கலாம், ஆனால் அவர் பயம் அடையவில்லை. அதற்குப் பதிலாக, அவர்களின் அறைகூவலை அவர் சந்தித்து மிகவும் மாற்றத்திற்குரிய உரிமைகோருதல்களை ஏற்படுத்தினார். அவரது வாதங்களை யூதர்கள் மறுக்க முடியாததால், அவர்கள் அவரைத் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் - ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய மனவிருப்பமற்று இருந்தார்கள் என்பது கவலைக்குரியதாயிருந்தது.*

*நம்மைப் பற்றிய விஷயம் என்ன? யோவான் 5ம் அதிகாரம் முதல் நூற்றாண்டு யூதர்களின் இருதயக் கடினத்தை வெளிப்படுத்துவதற்காக மட்டும் எழுதப்படவில்லை, மாறாக இது இருபத்தியோராம் நூற்றாண்டில் உள்ள நமது இருதயங்களை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதப்பட்டுள்ளது.*[31] *இயேசுவின் வரம்புமீறிய உரிமைகோருதல்கள் எவரொருவரையும் நடுநிலையில் நிலைத்திருக்க அனுமதிப்பதில்லை. இந்த உரிமைகோருதல்கள் பற்றி, C. S. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *தேவனாயிராத எந்த ஒரு பேச்சாளரின் வாயிலிருந்தும் இந்த வார்த்தைகள் வருமென்றால், அது வரலாற்றில் எந்த ஒரு பாத்திரத்தினாலும் எடுத்துரைக்கப்பட்ட மதியீனமாகவும் ஈடற்ற வஞ்சகமாகவும் என்னால் கருதப்படக் கூடியதை மறைமுகமாக எடுத்துரைக்கும்.*
>
> *… நீங்கள் உங்கள் தேர்ந்துகொள்ளுதலை மேற்கொள்ள வேண்டும். இந்த மனிதர் ஒன்று தேவனுடைய குமாரனாக இருந்திருக்க மற்றும் இருக்க வேண்டும் அல்லது இவர் ஒரு பைத்தியம் பிடித்த மனிதராக அல்லது அதைக்காட்டிலும் மோசமானவராக இருக்க வேண்டும். இவரை நீங்கள் ஒரு மதியீனர் என்று கூறி அடைத்து விடக்கூடும், அவர்மேல் துப்பக்கூடும் அல்லது பிசாசாக எண்ணி அவரைக் கொல்லக் கூடும். அல்லது நீங்கள் இவரது பாதங்களில் விழுந்து இவரை ஆண்டவரும் தேவனும் என்று அழைக்க முடியும்.*[32]

*யோவான் 5ல் இயேசு விசாரணையில் இருந்தார் - மற்றும் அவர் இன்னும் மனிதகுலத்தின் இருதயங்களில் விசாரணையில் இருக்கின்றார். இன்றைய நாளில் நீங்கள் நடுவராக இருக்கின்றீர்கள். உங்கள் தீர்ப்பு என்ன? இயேசு உண்மையைப் பேசினாரா? உண்மையிலேயே அவர் தாம் உரிமைகோரிய பிரகாரமாகவே இருக்கின்றாரா? உங்கள் பதில் "ஆம்" என்று இருக்குமென்றால், இந்த முடிவானது உங்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள மாற்றம் என்ன? இந்தப் பாடத்தை இயன்ற அளவு நடைமுறைக்குரியதாக ஆக்குவதற்கு, இது உங்கள் வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் யாவை என்று கேளுங்கள். இயன்ற வரையிலும் திட்டவட்டமானவரா யிருங்கள். இயேசுவின் மாற்றம் சார்ந்த உரிமைகோருதல்கள் மாற்றம் சார்ந்த உறுதிப்பாட்டிற்கு அழைக்கின்றன.*[33]

---

*குறிப்புகள்*

*[1]குணமாக்குதலின் வரலாற்றை விரிவாக்க நீங்கள் விரும்பலாம் - மற்றும் அநேகமாக ஓய்வுநாள் பற்றியும் மனிதர்களின் பாரம்பரியங்கள் பற்றியும் விவரங்களைக் கூட அநேகமாக நீங்கள் விரும்பலாம். [2]இந்தக் குற்றச்சாட்டு யோவான் 5:16, 18ல் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. [3]ஆதியாகமம் 2:2ஐ வாசிக்கவும். [4]எபிரெயர் 1:3ஐ வாசிக்கவும், இது தேவத்துவத்தின் அங்கமாகக் குமாரன் இந்த அண்டத்தைத் தாங்குகிறார் என்று உரைக்கிறது. [5]மத்தேயு 5:45ஐ வாசிக்கவும். [6]ஆதியாகமம் 18:25; உபாகமம் 32:39 ஆகிய வசனங்களை வாசிக்கவும். [7]இவ்வசனமானது சில வேளைகளில், ஆவிக்குரிய வாழ்வில் அவசியமான எல்லாவற்றிற்கும் "விசுவாசம் மட்டுமே" போதுமானது என்று சரியற்ற வகையில் போதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. "விசுவாசித்தல்" என்று இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கருத்தானது கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தைக் கொண்டிருத்தல் என்ற முற்றுணர்வுக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் "நம்பி, கீழ்ப்படிய வேண்டும்" (மத். 7:21; மாற். 16:16). [8]இவ்வசனமானது சிலவேளைகளில், ஒருமுறை ஆவிக்குரிய வாழ்வை பெற்றுக்கொண்ட (இரட்சிக்கப்பட்ட) ஒருவர் [ஒருபொழுதும்] இழந்துபோகப்பட முடியாது என்று சரியற்ற வகையில் போதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. சிலர், "அவ்வாறு இல்லையென்றால், அது நித்திய ஜீவனாயிராது" என்று கூறுகின்றார்கள். ஆயினும், தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் அவிசுவாசத்தின் மூலமாக நித்திய ஜீவனைத் தேவன் அவருக்கு விலக்கி வைக்கும்படி விழுந்துபோகக்கூடும் என்று வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது (1 கொரி. 10:12; யாக். 5:19, 20; 2 பேது 2:20-22). நான் ஒரு காலத்தில், வாழ்நாள் முழுவதும் உத்தரவாதத்துடன் கூடிய மையூற்றி எழுதும் பேனா ஒன்றைக் கொண்டிருந்தேன், ஆனால் அதை நான் தொலைத்து விட்டேன். அந்தப் பேனா வாழ்நாள் முழுவதற்குமான உத்தரவாதம் கொண்டிருந்தது என்ற உண்மையானது, நான் அதை என் வாழ்நாள் முழுவதும் கொண்டிருப்பேன் என்று உறுதியளிக்கவில்லை. [9]இவ்வசனமானது சிலவேளைகளில், கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய நியாயா சனத்திற்கு முன்பாக நிற்க மாட்டார்கள் என்று சரியற்ற வகையில் போதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் பவுல், நாம் நல்லவர்களாய் இருந்தாலும் தீயவர்களாய் இருந்தாலும் (ரோமர் 2:5-8; 14:10; 2 கொரி. 5:10), "நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" என்று கூறினார் (ரோமர் 14:10). [10]ஏவுதல்*

பெற்ற பதிவேடுகளின்படி, இந்த இடம் வரையிலும் இயேசு மரித்தோரில் இருந்து யாரையும் உயிர்ப்பித்து இருந்ததில்லை.

[11]நற்கிரியைகளைச் செய்தல் மற்றும் துர்க்கிரியைகளைச் செய்தல் பற்றிய கூற்றானது, நாம் செய்கின்ற செயல்களினால் நமது இரட்சிப்பை ஈட்டுகின்றோம் அல்லது அதற்குத் தகுதியாகின்றோம் என்று நிரூபிப்பதில்லை. ஆயினும், தேவன் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்திற்குப் பலன் அளிக்கின்றார் என்பது நிரூபணமாக உள்ளது (எபி. 5:8, 9; யாக். 2:14-26 ஆகிய வசனங்களைக் காணவும்). [12]தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார், ஆனால் அவர் தமது குமாரன் ''மூலமாக'' நியாயந்தீர்ப்பார் (அப். 17:31; ரோமர் 2:16). [13]உலகில் நான் வாழும் பகுதியில், "அவர் கொடுக்கவேண்டும் [ஆதாரம் கொடுத்தல்] அல்லது வாயை அடைக்க வேண்டும் [உரிமைகோருதலை ஏற்படுத்துதலை நிறுத்துதல்]" என்று நாங்கள் கூறுவதுண்டு. [14]"சாட்சி" என்பது யோவான் சுவிசேஷத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. "சாட்சி" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (marturia) என்பது அதன் பல்வேறு வடிவங்களில், இந்த(சுவிசேஷ)ப் புத்தகத்தில் ஏறக்குறைய ஐம்பது முறைகள் உள்ளது. NASBயின் பழைய பதிப்புகள் ''சாட்சி'' என்ற வார்த்தையைத் தரவழைத்தன, அதே வேளையில், மொழிபெயர்ப்பாளர்கள் இந்தப் பதிப்புக்களைப் புதுப்பித்தபோது, "testify" மற்றும் "testimony" என்ற வார்த்தைகளைக் கொண்டு நவீனமாக்கினார்கள். [15]யோவான் 5:32, 33ஐ சாதாரணமாக வாசித்தலானது, வசனம் 32ன் சாட்சி யென்பவர் யோவான் ஸ்நானனன் என்ற மனப்பதிவை விட்டுச் செல்லும் (வ. 33), ஆனால் இயேசு, தாம் குறிப்பிட்டது "மனிதரிடமிருந்து வந்தது அல்ல" (வ. 34) என்று முன்னதாகவே கூறச் சென்றார் மற்றும் அது "யோவானின் சாட்சியை விடப்பெரிய தாயிருந்தது" என்றும் அவர் கூறினார் (வ. 36). வசனம் 32ல் [ஆங்கில மொழியில்] "He" என்பதில் உள்ள "H" என்பது பெரிய எழுத்தில் உள்ளதைக் கவனியுங்கள், [வாக்கியத்தின் இடையில் இவ்வாறு பெரிய எழுத்தைப் பயன்படுத்துதல் என்பது தேவனைக் குறிப்பதாகும்] இது இவ்விடத்தில் தேவன் குறிப்பிடப்படுகின்றார் என்று NASB மொழிபெயர்ப்பாளர்கள் ஒப்புக்கொள்ளுதலாக உள்ளது. [16]"இதோ" என்ற வார்த்தையில் சுட்டிக் காண்பிக்கும் செயல் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. [17]Bruce Milne, *The Message of John* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 98. [18]இவ்வேளையில், யோவான் ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டு விட்டதால், இயேசு இறந்த கால வினைச் சொல்லைப் பயன்படுத்தினார் (மத். 4:12). [19]R. C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 451. [20]"கிரியைகள்" என்பது இயேசு தமது அற்புதங்களைக் குறிப்பதற்கு யோவான் சுவிசேஷத்தில் பயன்படுத்திய பொதுவான ஒரு சொற்றொடராகும் (7:3; 10:25, 32, 37, 38; 14:10, 11; 15:24 ஆகிய வசனங்களைக் காணவும்).

[21]அவர்கள் பிற்பாடு, இயேசு பிசாசின் வல்லமையினால் அற்புதங்களை நிகழ்த்தினார் என்று குற்றம் சாட்டினார்கள் (மத். 12:24), ஆனால் அவர் அற்புதங் களைச் செய்திருந்ததை அவர்கள் மறுக்கவில்லை. "அவர்கள் எல்லாரும் ஆச்சரியப் பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்'' என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும். [22]கிரேக்க மொழியில், இந்த வாக்கியத்தின் முதல் வினைச் சொல்லானது ("ஆராய்ந்து") NASBயில் உள்ளபடி ஒரு சுட்டுவினை(ஒரு உண்மை)யாகவோ அல்லது KJVயில் உள்ளபடி ஒரு ஆணைவினை(கட்டளை)யாகவோ இருக்கலாம். அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கையில், அவற்றில் அவர்கள் அவரைக் காணத்தவறி விட்டபடியால் சந்தர்ப்பப் பொருளில் இவ்விடத்தில் சுட்டுவினை என்பது நன்கு பயன்படுத்துவதாகக் காணப்படுகிறது. [23]Aboth 2:8; quoted in Frank Pack, *The Gospel*

*According to John*, Part 1 (Austin, Tex.: Sweet Publishing Co., 1975), 95. [24]*மத்தேயு 5:18ல் "சிற்றெழுத்து" மற்றும் "எழுத்தின் உறுப்பு" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் எபிரெய மொழியில் சிறு எழுத்துக் களையும் மிகச் சிறிய அடையாளங்களையும் குறிக்கிறது. இவ்விதமாக* NASB*யில்* "smallest letter" *மற்றும்* "stroke" *என்றுள்ளது.* [25]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 308. [26]*சில "கல்வியாளர்கள்," மோசே பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங் களை எழுதினார் என்பதை மறுக்கின்றார்கள், ஆனால் அவர் அவற்றை எழுதினார் என்று இயேசு கூறினார்.* [27]*எடுத்துக்காட்டாக, நியாயப்பிரமாணத்தின் பலியானது சிலுவையில் பூரணப்பட்ட ஒரு பலியை முன்எதிர் நோக்கியிருந்தது (எபி. 10:4, 12).* [28]*அவர்கள் இயேசுவைப் புறக்கணித்தமைக்கு இதுவே காரணம் என்று அவர் மறைமுகமாய் உணர்த்தினார்.* [29]This comment was adapted from an anonymous source quoted in R.C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 454. [30]*விருப்பம் இருந்தால், இது ஒரு நான்காவது பிரதானக் கருத்தாக ஏற்படுத்தப் படலாம், இது "தப்பிக்க இயலாத முடிவுகள்" என்பதாக ஒருவர் இயேசுவின் உரிமைகோருதலை ஏற்றுக்கொள்வார் என்றால், அவருக்கு முழுமையான ஒப்புக்கொடுத்தலின் அவசியம் உட்பட சில "தப்பிக்க இயலாத முடிவுகள்" உள்ளன என்பதைக் குறிப்பிடுகிறது.*

[31]*யோவான் சுவிசேஷமானது விசுவாசத்தை உண்டாக்குவதற்காக எழுதப் பட்டது (யோவா. 20:30, 31). அவ்வாறு செய்வதில், அது விசுவாசிக்க மனவிருப்ப முள்ளவர்களை அடையாளம் காண்கிறது, மற்றும் விசுவாசிக்க மனவிருப்பம் இல்லாதவர்களை வெளிப்படுத்துகிறது.* [32]C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1952), 55-56. [33]*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, மக்கள் கிறிஸ்தவர் களாகும்படியோ அல்லது கிறிஸ்துவுக்கான அவர்களின் உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்ளும்படியோ அவர்களை ஊக்கப்படுத்த நீங்கள் விரும்பலாம். கிறிஸ்தவராவது எப்படி என்று கூறும் வசனங்களில் மாற்கு 16:15, 16 மற்றும் அப். 2:38 ஆகியவை அடங்குகின்றன.*